***கவனிக்க.***- *2020.03.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* II *(அ) மற்றும் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

***கவனிக்க.***- COVID - *19 தொற்று நோய் காரணமாக 2020.04.03 ஆந் திகதிய 2170 ஆம் இலக்க, 2020.04.09 ஆந் திகதிய 2171 ஆம் இலக்க, 2020.04.17 ஆந் திகதிய 2172 ஆம் இலக்க, 2020.04.24 ஆந் திகதிய 2173 ஆம் இலக்க, 2020.04.30 ஆந் திகதிய 2174 ஆம் இலக்க, 2020.05.06 ஆந் திகதிய 2175 ஆம் இலக்க, 2020.05.15 ஆந் திகதிய 2176 மற்றும் 2020.05.22 ஆந் திகதிய 2177 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட வில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2178 - 2020 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2020.05.29**

*2178 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 976 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 980 |


**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2020, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விசேட அறிவித்தல்**

**கவனிக்க.-** COVID - *19 தொற்று நோய் காரணமாக நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட தனிமைப் படுத்திக் காண்காணித்தல் நடவடிக்கையினால் அரசாங்க மற்றும் தனியார் துறைசார்ந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமையினால் 2020.03.16 முதல் 2020.05.11 ஆந் திகதி வரை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அறிவித்தல்கள் எதுவும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படவில்லை.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பன்வில பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள்
ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் சட்டம்*

*261 ஆவது அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பன்வில பிரதேச சபை 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி நடத்திய பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 01*: XIV *கொண்ட பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*ஏ. ஜீ. செனவிரத்ன,*
*தவிசாளர்,*
*பன்வில பிரதேச சபை,*

*பன்வில பிரதேச சபை அலுவலகம்,*
*பன்வில,*
*2020, பெப்புருவரி 05.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, 261 ஆவது அதிகாரம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2016.02.23 ஆந் திகதியையும் 1955/7 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்* IV*(அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.05.05 ஆந் திகதி 2017/42 ஆம் இலக்கம் கொண்ட பகுதி* IV*(அ) வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான பிரதேச சபைகளது துணை விதிகளை இந்த முன்மொழிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செயற்படுத்த ஏற்றுக்கொள்வதென மேற்குறித்த உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் இத்தால் முன்மொழிகின்றேன்.*

*01. பிரதேச சபையின் எல்லைகளுக்குள் கட்டடங்கள் நிர்மாணிப்பின்போது திட்ட வரைவைப் பரிசோதனை செய்வது மற்றும் கட்டணம் அறவிடுவது தொடர்பான துணை விதிகள்*

*02. சேவைகள் வழங்குவதன் மீது கட்டணங்கள் அறவிடுவது தொடர்பான துணை விதிகள்*

*03. முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்*

*04. பொது நூலகங்கள் தொடர்பான துணை விதிகள்*

*05. நடமாடும் வர்த்தகம் தொடர்பான துணை விதிகள்*

*06. வரி அறவிடும் கருமங்களுக்கென தவணை அறிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பான துணை விதிகள்*

07. அருவருப்பான வர்த்தகங்கள், அபாயகரமான வர்த்தகங்கள் மற்றும் அருவருப்பான அபாயகரமான வர்த்தகங்கள் தொடர்பான துணை விதிகள்

08. மீன் விற்பனை தொடர்பான துணை விதிகள்

09. பிரதேச சபைச் சந்தைகள் தொடர்பான துணை விதிகள்

10. அலங்காரங்களை முறைப்படுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதிகள்

11. பொது மலசலகூடங்களது பயன்பாட்டை முறைப்படுத்துவது தொடர்பான துணை விதிகள்

12. விளம்பர அறிவித்தல்கள் தொடர்பான துணை விதிகள்

13. விலங்குப் பண்ணைகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் முறைப்படுத்துவது தொடர்பான துணை விதிகள்

14. வாடகை வாகனங்களைத் தரிக்கச் செய்வது தொடர்பான துணை விதிகள்

15. இறைச்சி விற்பனை தொடர்பான துணை விதிகள்

16. தனியார் கற்றல் நிலையங்கள் தொடர்பான துணை விதிகள்

17. மாடு அறுவை நிலையங்கள் தொடர்பான துணை விதிகள்

18. பிரதேச சபைகளது பாதைகளில் செலுத்தப்படும் வாகனங்களது நிறையையும் வேகத்தையும் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதிகள்

இந்த முன்மொழிவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயற்படுத்தவும், அதற்கு முன்னைய நாள் நள்ளிரவு 12 மணி வரை பன்வில பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் செயற்பாட்டிலிருந்த 2018.02.23 ஆந் திகதி 2060 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட துணை விதிகளை இரத்துச் செய்வதெனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2019, திசெம்பர் 27 ஆந் திகதி கொண்ட சபையின் இல. 01. XVI ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் இத்தால் முன்மொழிகின்றேன்.

05 - 08

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

நெல்லியடி நவீன சந்தையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கிலான ஒரு தடவை பாவனை குவளைகள் என்பவற்றின் பாவனையை தடைசெய்தல் - 2020

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நெல்லியடி நவீன சந்தையில் பொலித்தீன் (Polythene) மற்றும் பிளாஸ்டிக்கிலான ஒரு தடவை பாவனை குவளைகள் (Plastic One day cups) என்பவற்றின் பாவனையை தடைசெய்தல் தொடர்பாக 2020.03.02 ஆம் திகதிய 20 (I) / 2020.03.02 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

த. ஐங்கரன்,
தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை,

பிரதேச சபை அலுவலகம்,
கரவெட்டி
2020, மார்ச் 04.

**தீர்மானம்**

நெல்லியடி நவீன சந்தையில் பொலித்தீன் (Polythene) மற்றும் பிளாஸ்டிக்கினால் ஒரு தடவை பாவனை குவளைகள் (Plastic One day Cups) போன்றவற்றின் பாவனை 2020.03.01 இலிருந்து முற்றாக தடைசெய்யப்பட வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

05 - 9/01

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

நெல்லியடி பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தை தடைசெய்தல் - 2020

வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 4 (அ) இல் வெளியிடப்பட்டு வடக்கு மாகாணசபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில 4 (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான துணைவிதிகளின் அத்தியாயம் 4 பகுதி II இல் குறிப்பிடப்பட்ட துணைவிதிகளுக்கிணங்கவும் மற்றும்அத்துணை விதிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் 2017.07.07 ஆம் திகதிய 2027 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வத்த்தமானியில் 4 (ஆ) இல் வெளியிடப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவும் நெல்லியடி பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தை தடைசெய்தல் தொடர்பாக 2020.03.02 ஆந் திகதிய 20 (II)/2020.03.02 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

த. ஐங்கரன்,<br>தலைவர்,<br>வடமராட்சி தெற்கு மேற்கு,<br>பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,<br>கரவெட்டி,<br>2020, மார்ச் 04.

**தீர்மானம்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, நெல்லியடி பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தை தடைசெய்வதுடன் பொருத்தமான வேறிடத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

05 - 9/02

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

பாடசாலை நாட்களில் பாரவூர்திகளை கட்டுப்படுத்தல்

வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆம் திகதிய 1952/16 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 4 (அ) இல் வெளியிடப்பட்டு வடக்கு மாகாணசபையால் 2017.02.21 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 4 (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான துணைவிதிகளின்

*அத்தியாயம் 3 பகுதி II இல் குறிப்பிடப்பட்ட துணைவிதிகளுக்கிணங்கவும் மற்றும் இத்துணை விதிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் 2017.07.07 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வத்த்தமானியில் 4 (ஆ) இல் வெளியிடப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லையில் பாடசாலை நாட்களில் பாரவூர்திகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக 2019.11.18 ஆந் திகதிய 49/2019.11.18 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*த. ஐங்கரன்,*
*தலைவர்,*
*வடமராட்சி தெற்கு மேற்கு*
*பிரதேச சபை,*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கரவெட்டி,*
*2020, மார்ச் 04.*

***தீர்மானம்***

*வதிரிச்சந்தி தொடக்கம் மாலிசந்தி வரையும் மற்றும் வதிரிச்சந்தி தொடக்கம் திரு இருதயக் கல்லூ ரி வரையும் பாடசாலை நாட்களில் காலை 7.00 முதல் 8.00 மணி வரையும், பிற்பகல் 1.00 தொடக்கம் 2.00 வரையும் அவ்வீதியால் பாரவூர்திகள் எவையும் பயணிப்பது மற்றும் தரித்து நிற்பது தடைசெய்யப்படவேண்டுமெனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

*05 - 9/03*

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

*முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தைப் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகளை பதிவுசெய்தல் - 2020*

*வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/16 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 4 (அ) இல் வெளியிடப்பட்டு வடக்கு மாகாணசபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 4 (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான துணைவிதிகளின் அத்தியாயம் 4 பகுதி II இல் குறிப்பிடப்பட்ட துணைவிதிகளுக்கிணங்கவும் மற்றும் இத்துணை விதிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் 2017.07.07 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வத்த்தமானியில் 4 (ஆ) இல் வெளியிடப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவும் நெல்லியடி நகரப்பகுதில் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தைப் பயன்படுத்தும் முச்சகர வண்டிகளைப் பதிவு செய்தல் தொடர்பாக 2020.03.02 ஆம் திகதிய 20(III)/ 2020.03.02 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*த. ஐங்கரன்,*
*தலைவர்,*
*வடமராட்சி தெற்கு மேற்கு*
*பிரதேச சபை,*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கரவெட்டி,*
*2020, மார்ச் 04.*

**தீர்மானம்**

*நெல்லியடி நகரப்பகுதியில் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தைப் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகள் பிரதேச சபையில் பதிவு செய்வதுடன் தரிப்பிடத்தில் முச்சக்கரவண்டிகளைத் தரித்துவிடுவதற்கான கட்டணமாக மாதாந்தம் ரூபா. 500.00 ஐ பிரதேச சபை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் தரிப்பிடத்தைப் பயன்படுத்தும் முச்சக்கரவண்டி சாரதிகள் பிரதேச சபையால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

*05 - 9/04*

---

## நானாவித அறிவித்தல்கள்

**காரைநகர் பிரதேச சபை**

வருமான அறவீடுகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 24(03) ஆம் பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர் பிரதேச சபையின் 2019.12.12 ஆந் திகதிய 293 ஆம் இலக்க நிர்வாகக் கட்டளைக்கு அமைவாக பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள வருமான அறவீடுகள் இப் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு காரைநகர் பிரதேச சபைக்குச் சொந்தமான/உரித்தான வருமானம் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

*வீ. கேதீஸ்வரதாஸ்,*
*தவிசாளர்,*
*பிரதேச சபை,*
*காரைநகர்.*

*பிரதேச சபை,*
*காரைநகர்.*

**காரைநகர் பிரதேச சபை**

விளம்பரக் கட்டணங்களுக்கான கட்டணம் விதித்தல் - 2020

*இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து விளைவுறும் வண்ணம் விளம்பரங்களுக்கு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட வேண்டும் என்று 293 ஆம் இலக்க 2019.12.12 ஆந் திகதிய தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

| | | 3 மாதம் ரூபா சதம் | 12 மாதம் ரூபா சதம் |
|---|---|---|---|
| 01. கொடி விளம்பரம் | 1 சதுர அடி | 10.00 | 40.00 |
| 02. ஒளியூட்டப்பட்ட விளம்பரங்கள் | 1 சதுர அடி | - | 100.00 |
| 03. ஒளியூட்டப்படாத விளம்பரங்கள் | 1 சதுர அடி | - | 50.00 |
| 04. சுவர்களில் அமைக்கப்பட்ட விளம்பரம் | 1 சதுர அடி | - | 50.00 |

## காரைநகர் பிரதேச சபை

சபையின் தண்ணீர்க்கட்டணம், தண்ணீர்த்தாங்கி வாடகைக்குவிடல் கட்டணம்

*இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து விளைவுறும் வண்ணம் தண்ணீர்த் தாங்கி வாடகைக்கு விடல், தண்ணீர் விநியோகத்தின் பொருட்டு விதிக்கப்படும். பின்வரும் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட வேண்டும் என்று 293 (5) ஆம் இலக்க 2019.12.12 ஆந் திகதிய தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

| | ரூபா |
|---|---|
| 01. 1,000 லீற்றர் குடிநீர் | 800.00 |
| 02. தண்ணீர் தாங்கி (நாள் ஒன்றிற்கு) | 250.00 |
| 03. நீர்த்தாங்கி ஏற்றியிறக்கல் கட்டணம் | 400.00 |
| 04. உருளை வாடகை சிறியது (நாளொன்றிற்கு) | 500.00 |
| 05. பக்கோ வாடகை (போக்குவரத்துச் செலவு இன்றி) | 3000.00 |

வீ. கேதீஸ்வரதாஸ்,
தவிசாளர்,
பிரதேச சபை,
காரைநகர்.

பிரதேச சபை,
காரைநகர்,
2020.01.01.

05 - 13

---

## கண்டி மாநகர சபை

கழிவு நீர் அகற்றல் கட்டண சுழற்சி

### கழிவு நீர் முகாமைத்துவ முறைமைக்குரிய இடைக்காலச் சட்டம்

15.1 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*கண்டி மாநகர சபையின் கழிவு நீர் முறைமைக்கு இணைவதன் ஊடாக கழிவு நீரை அகற்றும் சேவைக்காக தயாரித்துள்ள கட்டணச் சுழற்சிக்கு 2019.09.26 ஆந் திகதி நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தின் முடிவு இல. 8(12) இன் கீழ் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் கண்டி மாநகர சபையின் கழிவு நீர் முறைமையுடன் இணைவதன் ஊடாக கழிவு நீர் அகற்றல் சேவையினை பெறும் நுகர்வோர் அனைவரிடமிருந்தும் கீழ் குறித்த கட்டணத் தொகையினை 2020.06.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அறவிடப்படும் என்பதை 2011.05.30 ஆந் திகதிய கழிவு நீர் முகாமைத்துவ முறைமை தொடர்பான இடைக்காலச் சட்டத்தின் 15.1 ஆம் பிரிவின் படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

கேசர டீ. சேனாநாயக்க,
நகர பிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2020.05.18.

**கட்டணத் தொகை 01**

**வீட்டுப் பாவனை**

| *அலகுகளின் எண்ணிக்கை* | *பாவனைக் கட்டணம் ரூ./அலகு* |
|---|---|
| *10 க்கு குறைந்த* | *50.00 (நிலையான)* |
| *11 - 20* | *100.00 (நிலையான)* |
| *21 அல்லது அதற்கு மேற்பட்ட* | *30.00 வீதம்* |

**கட்டணத் தொகை 02**

**வீட்டுப் பாவனை அல்லாத**

| *அலகுகளின் எண்ணிக்கை* | *பாவனைக் கட்டணம் ரூ./அலகு* |
|---|---|
| *40 க்கு கீழ்* | *51.00 வீதம்* |
| *41 - 150* | *64.00 வீதம்* |
| *151 அல்லது அதற்கு மேற்பட்ட* | *77.00 வீதம்* |

**கட்டணத் தொகை 03**

**அறக் கட்டளை நிலையங்கள்**

| *அலகுகளின் எண்ணிக்கை* | *பாவனை கட்டணம் ரூ./அலகு* |
|---|---|
| *அனைத்து அலகுகளுக்கும்* | *5.00 வீதம்* |

**கட்டணத் தொகை 04**

**பாடசாலைகள் மற்றும் இலவசமாக வழங்கும் இடங்கள்**

| *அலகுகளின் எண்ணிக்கை* | *பராமரிப்புக் கட்டணம் ரூ./அலகு* |
|---|---|
| *அனைத்து அலகுகளுக்கும்* | இலவசம் |

*06 - 04*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*